22nd January 1965]

திரு. கரு. சிமைச்சாமி: சார், மீனவர்கள் படகு வேண்டும் என்று மனுப் போட்டால், படகு கொடுக்கப்படுகிறதா அல்லது பணம் கொடுத்து படகை அவர்களே வாங்கிக் கொள்ளச் சொல்லப் படுகிறார்களா?

கனம் திரு. கோ. பூவராகன்: இது விசைப் படகைப் பொருத்தது. படகு தான் கட்டிக் கொடுக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: சார், சமீபத்திலே தனுஷ்கோடியிலே பாதிக்கப்பட்ட மீனவர்கள் படகுகள் இல்லாமல் இருப்பதால், அவர்களுக்கு முதல் இடம் கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திரு. கோ. பூவராகன்: ராமேச்வரம், தனுஷ்கோடி இங்கெல்லாம் பாதிக்கப்பட்டவர்களெல்லாம் என்னென்ன படகுகள் வைத்திருந்தார்களோ அதேபோன்று படகுகள் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்த விசைப்படகுகள் எல்லாம், அந்தப் பகுதி மக்களே வாங்குகிறார்களா? அல்லது சென்னையில் இருப்பவர்கள் கூட வாங்கி நடத்துவதாக கேள்விப்படுகிறேன், அது சரியா?

கனம் திரு. கோ. பூவராகன்: அப்படிப்பட்ட புகார் இல்லை. மனுப்போட்ட மீனவர்களுக்குத்தான் கொடுக்கிறோம்.

Arts College at Paramakudi

* 57 Q.—SRI C. SRINIVASAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to start an Arts College at Paramakudi in 1965?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No.

University at Madurai

* 58 Q.—SRI M. KALYANASUNDARAM:
SRI M. S. SELVARAJAN:
PULAVAR K. GOVINDAN: } Will the Hon the Chief Minister be pleased to state with reference to the answer given to Question No. 391 on 25th March 1964, the present stage of the proposal to locate a University at Madurai?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: An expert committee has been constituted under the Chairmanship of the Director of Public Instruction, to work out the details relating to the setting up of the University. The report of the Committee is awaited. In the meantime special staff has been sanctioned for acquiring the necessary land expeditiously. Permission has also been accorded for the transfer of the adjacent poromboke land.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS

[22nd January 1965

திரு. மீ. கலியாணசுந்தரம்: சார், ஒரு சப்கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது, அதன் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது என்று அமைச்சர் கூறினுர்கள். அந்தக் கமிட்டி எதற்காக நியமிக்கப்பட்டது, அதன் பணி என்ன, என்னென்ன விஷயங்களில் அவர்களுடைய சிபாரிசு எதிர்பார்க்கப்படுகிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மதுரை பல்கலைக்கழகம் எத்தகைய அமைப்புக்கொண்டதாக இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டும்: அது Federal University -யா, அல்லது Unitary University யா Affiliating University யா, அல்லது Teaching University -ஆக இருக்கலாமா, எந்தெந்த ஜில்லாக்களில் சேருவது என்று இவையெல்லாம் கவனிக்கப்படுகின்றன.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறும் தகவல்களிலிருந்து, 1965-ஆம் வருஷத்திலாவது இந்த யூனிவர்ஸிடி நிச்சயமாக ஆரம்பிக்கப்படுமா என்பது சந்தேகமாக இருப்பதால், அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்ற தகவலாவது கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது யூனிவர்ஸிடி சென்டர் அங்கே இருக்கிறது. உடனடியாக யூனிவர்ஸிடியை ஆரம்பித்துவிடுவது என்ருல், அதற்கும் பூர்வாங்கமாக எத்தனையோ ஏற்பாடுகள் செய்யவேண்டும். எப்படியும் இதற்கு வேண்டிய சட்டத்தைச் சீக்கிரத்திலேயே இந்த மன்றத்தில் இயற்றிவிடலாம் என்று தான் நான் எதிர்பார்க்கிறேன். அதற்கு முன்பு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: ஒன்றரை வருஷங்களுக்கு முன்பாகவே மதுரை பல்கலைக்கழகம் சம்பந்தமான மசோதா வரும் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். அப்படி ஒன்றரை வருஷங்களுக்கு முன்பே மசோதா வரவேண்டிய அளவுக்கு நிலைமை இருந்தும், இவ்வளவு கால தாமதம் ஆவதற்கு என்ன வேலைகள் குறுக்கிட்டன என்று கூற முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது பற்றிய சிபார்சுகள் சீக்கிரத்திலே வேண்டும் என்று தான் கோரப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாவற்றையும் பரிசீலனை செய்து, இடங்களையெல்லாம் பார்வையிட்டு ஓர் அறிக்கை அனுப்புவதாகச் சொன்ஞர்கள். இப்பொழுதிருக்கிற பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கூடக் கனம் உறுப்பினர்கள் இங்கே யோசனை கூறியிருக்கிருர்கள். இதெல்லாவற்றையும் நன்ருகப் பரிசீலனை செய்து ஒரு மசோதா தயாரித்தால், அதை வைத்துக்கொண்டு இப்பொழுதிருக்கிற பல்கலைக்கழகங்களையும் எவ்வாறு மாற்றுவது என்று யோசிக்கலாம் என்பது உத்தேசம். ஆகையால் கொஞ்சம் தாமதம் ஆனுலும் பாதகம் இல்லை. அது சீக்கிரத்திலே வந்துவிடும். எப்படியும் சீக்கிரத்தில் மசோதா தயாரித்து இந்த மன்றத்திலே சமர்ப்பிக்கப்படும் என்று தான் நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. வை. சங்கரன்: இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டது. ஆனல், மசோதா ஜனவரியிலே கொண்டுவரப்படும் என்று சொல்

22nd January 1965]

லப்பட்டது. அதில் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன? 1965-லேயே இது ஆரம்பிக்கப்படும் என்று சொல்லியும், இதில் தாமதம் ஏற்பட்டுக்கொண்டிருக்கக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஜனவரியில் மசோதாவைக் கொண்டு வந்து சட்டமாக நிறைவேற்றினாலும் கூட, உடனடியாக யூனிவர்சிடியைப் பரிபூரணமாக அங்கே அமைக்க முடியாது. ஆகையால், ஒன்றிரண்டு மாதங்கள் தாமதமானாலும், சட்டத்தைத் சீக்கிரம் நிறைவேற்றிவிடலாம். உடனடியகப் பூர்வாங்க ஏற்பாடுகளை எடுத்துக்கொள்ளலாம்.

Vice-Chancellors of Universities

* 59. *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to restrict the tenure of office of the Vice-Chancellors of Universities and to make any change in the system of election?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no such proposal.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இன்றைக்கிருக்கும் சட்டபடி தொடர்ந்து ஒரே நபர் வைஸ்-சான்ஸலராக இருக்கும் நிலைமை இருக்கிறது. அதை மாற்றவேண்டும் என்று மத்திய சர்க்கார் கல்வி அமைச்சர் நம்முடைய அரசாங்கத்திற்கு ஏதாவது யோசனை தெரிவித்திருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு ஒன்றும் இல்லை'

Atomic Power Plant, Kalpakkam

* 60. *Q.*—PULAVAR K. GOVINDAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the extent of lands acquired in the Kalpakkam area for the establishment of an Atomic Power Plant; and

(*b*) the arrangements made for the rehabilitation of the people evicted from that area?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: (அ) கல்பாக்கத்தில் நிறுவ உத்தேசித்துள்ள அணு மின்சார நிலையத்திற்காக இதுவரை நிலம் ஏதுவும் வாங்கவோ, ஆர்ஜிதம் செய்யப்படவோ இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Thermal Power stations

* 61. *Q.*—SRI M. KARUNANITHI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to establish a Thermal Power Station at Ennore, near Madras; and

(*b*) if so, when this scheme will be implemented?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes.

(*b*) In about three years.

▲ 139—2